# சூர்யா கல்வி குழுமத்தில் ரத்த தான முகாம்

விக்கிரவாண்டி, டிச.14-

விக்கிரவாண்டி சூர்யா கல்வி குழுமத்தின் சார்பில் ரத்ததான முகாம் நடந்தது.

விக்கிரவாண்டி சூர்யா காலேஜ் ஆப் பார்மசி, சூர்யா இன்ஜினியரிங் கல்லூரியுடன் வட்டார அரசு மருத்துவமனை இணைந்து கல்லூரி வளாகத்தில் நடத்திய முகாமிற்கு அறக்கட்டளை சேர்மன் டாக்டர் கவுதம சிகாமணி தலைமை தாங்கினார். வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் விஜய் பாபு, இன்ஜினியரிங் கல்லூரி டீன் ஜெயச்சங்கர் முன்னிலை வகித்தார். பார்மஸி கல்லூரி முதல்வர் டாக்டர் அன்பழகன் வரவேற்றார்.

விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ரத்த வங்கி டாக்டர்கள் மணி மொழி, தமிழ் மணி தலைமையில் மருத்துவ குழுவினர் கல்லூரி மாணவர்கள் 120 பேரிடமிருந்து ரத்ததானம் பெற்றனர்.

சுகாதார மேற்பார்வையாளர் சிஸ்ரோ நடேசன், ஆய்வாளர்கள் உதயகுமார், பாபு, புஷ்பராஜ், சமூக நல செவிலியர்கள் செல்வராணி, பகவதி, கல்லூரி பி.ஆர்.ஓ., முரளி, என்.எஸ்.எஸ்.,ஜே.ஆர்.சி., ஒருங்கிணைப்பாளர்கள் ரங்கநாதன், கிறிஸ்டோபர் வில்சன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




விக்கிரவாண்டி சூர்யா கல்வி குழுமத்தின் சார்பில் ரத்ததான முகாம் நடந்தது.